# தெரிந்து கொள்வோம் – பணி நிறைவு பயன்கள்

## ( Retirement Benefits )

### 2.3.13 பணிநிறைவு பயன்கள் (RETIREMENT BENEFITS)

பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு கீழ்கண்ட பட்டியல்கள் தயார் செய்யலாம்.

i. EL

ii. UEL On PA

iii. SPF 1984 or SPF 2000

iv. CPS Final Settlement

v. GPF & DCRG பட்டியல்கள் கருவூலத்தில் தயார் செய்வார்கள்.

#### அ) EL Bill

i. ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு பட்டியலானது பணியாளர் ஓய்வு பெறும் அன்று அவரது விடுப்பு கணக்கில் உள்ள நாட்கள் (அதிகபட்சம் 240) முழுவதும் சரண் செய்யப்பட்டு காசாக்கப்படும்.

ii. Pay, DA (ஓய்வு பெறும் நாளன்று உள்ள அகவிலைப்படி), HRA இம்மூன்றும் வழங்கப்படும்.

iii. Personal pay ஓய்வூதிய பலன்களுக்கு எடுத்துக் கொள்வதில்லை.

iv. இதற்கு வருமான வரி பிடித்தம் கிடையாது.

#### ஆ) UEL

i. ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு பட்டியலானது பணியாளர் ஓய்வு பெறும் அன்று அவரது விடுப்பு கணக்கில் உள்ள நாட்கள் முழுவதும் சரண் செய்யப்பட்டு காசாக்கப்படும்.

ii. Pay, DA (ஓய்வு பெறும் நாளன்று உள்ள அகவிலைப்படி), HRA இம்மூன்றும் வழங்கப்படும்.

iii. Personal pay ஓய்வூதிய பலன்களுக்கு எடுத்துக் கொள்வதில்லை.

iv. இதற்கு வருமான வரி பிடித்தம் உண்டு. ஒருவருடத்திற்கு உரிய உத்தேச வருமான வரி கணக்கிட்டு பிடித்தம் செய்தல்.

| வ. எண் | பதவி | ஈட்டிய விடுப்பு (EL) | சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு (UEL) |
|---|---|---|---|
| 1 | தலைமை ஆசிரியர், முதுகலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், கணினி ஆசிரியர், கணினிப் பயிற்றுநர், இசை ஆசிரியர், நெசவு ஆசிரியர், விவசாய ஆசிரியர், தையல் ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், உடற்கல்வி நிலை - 1, உதவியாளர், இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், | ஓய்வு பெறும் நாள் அன்று கணக்கில் உள்ளது (அதிகபட்சம் 240 நாட்கள்) | பணிக்காலம் 10 ஆண்டுகளுக்கு கீழ் இருப்பின் 90 நாட்கள் பத்தாண்டுகளுக்கு மேல் 180 நாட்கள். பணப்பலனுக்கு 50% எடுத்துக்கொள்ளப்படும். 10 ஆண்டுகளுக்கு 45 நாட்களும், 180 நாட்களுக்கு 90 நாட்களும் சரண் செய்து காசாக்கப்படும். |
| 2 | பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் | ஓய்வு பெறும் நாள் அன்று கணக்கில் உள்ளது | 15 ஆண்டுகளுக்குள் பணி முடித்திருந்தால் 90 நாட்கள், பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் 180 நாட்கள். பணப்பலனுக்கு 50 % எடுத்துக்கொள்ளப்படும். 15 ஆண்டுகளுக்கு 45 நாட்களும், 180 நாட்களுக்கு 90 நாட்களும் சரண் செய்து காசாக்கப்படும். |

### இ) SPF 1984 or SPF 2000

i. 01.10.2000-க்குப் பிறகு பணியில் சேரும் அனைவருக்கும் SPF 2000 திட்டத்தில் ரூ.70/- கட்டாயம்.

ii. ஏற்கனவே 1984 திட்டத்தில் இருப்பவர்கள் விருப்பம் தெரிவித்தால் 01.10.2000 முதல் (SPF 2000) ரூ.50/- பிடித்தம் மேற்கொள்ளுதல்.

iii. SPF-1984 தனிப் பட்டியலாகவும், SPF-2000 தனிப்பட்டியலாகவும் சமர்ப்பித்தல்.

iv. மூன்று கணக்குத் தலைப்புகளில் பட்டியல் IFHRMSல் வராது. ஒரே பட்டியலாகத் தான் சமர்ப்பிக்க முடியும்.

v. SPF-1984 & 2000ல் இரண்டிலும் பிடித்தம் மேற்கொண்டிருந்தால் SPF-1984 scheme-க்கு மட்டுமே அரசின் பங்களிப்பு தொகை ரூ.10,000 வழங்கப்படும்.

vi. IFHRMS-ல் நாம் சரியான கணக்கு தலைப்பைத் தேர்வு செய்வதைப் பொறுத்து கணக்கு தலைப்பு சரியாக பிரிந்து வரும்.

   a. SPF1984 & 2000 AIDED ELEMENTARY & MUNIIPAL SCHOOL - அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நகராட்சி பள்ளிகள்.

   b. SPF-1984 & 2000 AIDED SCHOOL HS & HSS – அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

   c. SPF 1984 & 2000 MUNICIPAL SCHOOL HS & HSS – நகராட்சி பள்ளிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள்.

   d. SPF 1984 & 2000 OTHERS – பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள CEO, DEO, BEO அலுவலகங்கள், தொடக்க பள்ளிகள், உயர்நிலை பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.

### ஈ) CPS Final Settlement

i. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் பணியாளருக்கு சந்தாத் தொகை அதற்குரிய வட்டி அரசின் பங்களிப்பு தொகை அதற்குரிய வட்டித் தொகை என மூன்றும் காசாக்கப்படும்.

ii. மூன்றும் சேர்ந்து ஒரே பட்டியலாக IFHRMS-ல் வரும்.

iii. IFHRMS-ல் நாம் சரியான கணக்கு தலைப்பைத் தேர்வு செய்தல். தேர்வு செய்வதைப் பொறுத்து கணக்கு தலைப்பு சரியாகப் பிரிந்து வரும்.

iv. CPS AIDED - அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்.

v. CPS MUNICIPALITY - நகராட்சி பள்ளிகள் மற்றும் அலுவலகங்கள்.

vi. CPS Regular - பள்ளிக் கல்வித்துறையின் கீழுள்ள CEO, DEO, BEO அலுவலகங்கள், தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.

### உ) GPF & DCRG

DCRG மற்றும் GPF ஆகிய இரண்டு பட்டியல்கள் கருவூலத்தில் தயார் செய்யப்படுகிறது. AG அலுவலகத்தில் இருந்து தபால் வந்ததும் தடையின்மைச் சான்று சமர்ப்பித்தால் பட்டியல் காசாக்கப்படும்.

**நன்றி.மகிழ்ச்சி**

**அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர் அலுவலர் சங்கம்**

பதிவு எண்:எஸ்.ஆர்.ஜி./காரைக்குடி/53/2023.